# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை), தருமபுரி

ந.க.எண்.205/2021/ஏ4 நாள். 14.02.2022

## குறிப்பாணை

பொருள் : சுய உதவிக்குழுக்கள் - மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு மத்திய வங்கியின் கிளைகள் மூலம் அதிகளவில் கடன் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : வங்கியின் சுற்றறிக்கை ந.க.எண்.205/2021/ஏ4, நாள்.13.12.2021.

--------

பார்வையில் காணும் வங்கியின் சுற்றறிக்கையில், சுய உதவிக்குழுக்களுக்கு உரிய காலத்திற்குள் கடன் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் அனைத்து கிளைகளிலும் ரூ.12.00 இலட்சங்கள் வரை கிளையளவில் கிளை மேலாளர்களே மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் அனுமதித்து வழங்க அதிகாரம் அளித்து அது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கிளை மேலாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை விரிவாக தெரிவிக்கப்பட்டிருந்தது. 2021-22-ஆம் ஆண்டிற்கான மகளிர் சுய உதவிக்குழு கடன் மொத்த குறியீடு ரூ.228.00 கோடி. இதுவரை எய்தியது ரூ.47.41 கோடி ஆகும்.

இந்நிலையில் ஜனவரி 2022-ஆம் திங்களில் ஒட்டுமொத்த 43 கிளைகளுக்கும் சேர்ந்து 28 குழுக்களுக்கு ரூ.204.15 இலட்சங்கள் மட்டுமே கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. 2021-2022-ஆம் ஆண்டிற்கு கிளைகள் அளவில் மகளிர் சுயஉதவிக்களுக்கு ரூ.81.00 கோடி குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் 31.01.2022-ஆம் தேதிவரை ரூ.7.58 கோடி மட்டுமே கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இது வங்கியின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானது அல்ல. கிளை மேலாளர்கள் அளித்துள்ள புள்ளி விபரங்களில் 30.09.2021-ஆம் தேதிய நிலவரப்படி கிளைகளில் சேமிப்பு கணக்கு துவங்கி 6 மாதங்கள் நிறைவு பெற்று கடன் பெற தகுதியான குழுக்களாக தருமபுரி மாவட்டத்தில் 159 குழுக்களும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 269 குழுக்களில் ஆக மொத்தம் 428 குழுக்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது0

மேலும் 31.01.2022-ஆம் தேதிய நிலவரப்படி நமது வங்கியின் நேரடிக் கடன்களின் நிலுவை ரூ.563.48 கோடி மட்டுமே நிலுவையுள்ளது. இது நேரடிக் கடனின் மொத்த நிலுவையில் 25.96% மட்டுமே ஆகும். இந்நிலையில்தான் நமது வங்கியின் கடன் வழங்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்தி கடன் வழங்குதலில் வங்கித் துறையில் நிலவும் கடும் போட்டினை கருத்தில் கொண்டு ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களை தக்க வைக்கவும், புதிய வாடிக்கையாளர்களை ஈர்க்கவும், வங்கியின் கடன் வழங்கும் நடைமுறைகளை எளிமையாக்கி கிளையளவில் கிளை மேலாளர்களே ரூ.12.00 இலட்சங்கள் வரை கடன் வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதை கிளை மேலாளர்கள் கவனத்தில் கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

தற்சமயம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்படும் குழுக்களின் விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக /நகர்புற வாழ்வாதார இயக்க அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட பட்டியல்களை அனைத்து கிளைகளுக்கும் மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிளைகளிலும் குறைந்தபட்சம் 100 மகளிர் சுய உதவிக்குழுக்கு கடன் வழங்குவதற்கு ஏதுவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் மகளிர் சுய உதவிக்குழு கடன் நிலுவை குறைந்தபட்சம் ரூ.10.00 கோடி அளவில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

எனவே மேற்கண்ட பட்டியலை பதிவிறக்கம் செய்து அதில் தகுதியான குழுக்களை கண்டறிந்து அக்குழுக்களுக்கும் கிளைகளில் பராமரிக்கப்படும் குழுக்களில் சேமிப்பு கணக்கு துவக்கி 6 மாதங்கள் நிறைவுபெற்று கடன் பெற தகுதியான குழுக்களாக உள்ள 428 குழுக்களுக்கும் வங்கியின் சுற்றறிக்கை ந.க.எண்.205/2021/ஏ4, நாள். 13.12.2021-இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் கிளை மேலாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை தவறாமல் பின்பற்றி கடன்கள் வழங்கப்பட வேண்டுமெனவும், தங்கள் கிளைக்கு ஒதுக்கப்பட்டுள்ள இலக்கினையும் (Target) தவறாமல் எய்த வேண்டுமென்றும் தவறும்பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./-மா.சந்தானம்,

**இணைப்பு :-** இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

மேற்கண்டவாறு

**பெறுநர் :-**
அனைத்து கிளை பணியாளர்கள் - கிளை மேலாளர் மூலமாக.

**நகல் :-**

1. உட்பரிசோதகர்கள், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம்
   (மாதா மாதம் ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு)
2. ஆய்வுக்குழு - கிளை ஆய்வின் போது சரிபார்க்கும் பொருட்டு.
3. தலைமையக அனைத்து உதவி பொது மேலாளர்கள்/ பிரிவு மேலாளர்கள்
   (கிளை ஆய்வின் போது இக்கடன்களை சரிபார்க்கும் பொருட்டு)
4. இணைப்பதிவாளர் /மேலாண்மை இயக்குநர்,
   துணைப்பதிவாளர் / முதன்மை வருவாய் அலுவலர் மற்றும்
   பொதுமேலாளர் ஆகியோர் மேசைக்கு.

14/2/2022

/உண்மை நகல்/ மேலாளர்(கபச)

14/02/22